புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# சங்க இலக்கியத்தில் பண்பாட்டுக் கூறுகள்

முனைவர் ஏ.மேரி நேசபிரியம்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம்-59, தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச் சுருக்கம்:

தமிழருடைய பண்பாடுகளில் தலைசிறந்த பண்பாடு உலகம் முழுவதையும் தாயகமாக கொள்வதாகும். உலகம் முழுமையும் உறவு கொள்வதே தமிழருடைய பண்பாடு ஆகும். உலகம் முழுவதும் நட்புக்கொள்வது தமிழரின் கொள்கையாகக் கொள்ளப்படுகிறது. எனவேதான் புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளிர் ' என்று பாடினார். மனிதகுலத்தின் மிகப் பழமையான பண்பாடு இந்திய பண்பாடு ஆகும்.அதிலும் மிகச் சிறப்பானது தமிழர் பண்பாடு ஆகும். தமிழரின் பண்பாடு உலகம் முழுவதிலும் இன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மனித இனம் எப்படி வாழ வேண்டும் எப்படி வாழக்கூடாது என்பதை பண்பாட்டின் வாயிலாகத் தான் அறிய முடிகிறது. காதல், விருந்தோம்பல், ஈகை , ஒருமைப்பாடு, நாகரீகம் ,வாழ்க்கை முறை, போர் போன்றவை பண்பாட்டுக் கூறுகளாகக் கருதப்படுகிறது. உலகின் முதல் முதலில் உணவை நாகரீகமாக சமைத்தவன் தமிழனே என்று பெருமை கொள்ள வேண்டும். சங்க இலக்கியங்கள் காதல், வீரம் ,கொடை மற்றும் இல்லற அறமாகிய விருந்தோம்பலை கடைப்பிடித்து உள்ளனர் .விருந்தோம்பல் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளின் உயிர்நாடியாக கருதப்படுகிறது. தமிழர்கள் பண்பட்ட வாழ்வினை பண்பாடுடன் வாழ்ந்துள்ளனர் பண்பாடு ஒரு இலக்கிய கருப்பொருளாக கொள்ளப்படுகிறது. . சங்க இலக்கியங்களைச் சான்றாதாரமாகக் கொண்டு பண்பாட்டுக் கூறுகள் இடம்பெறும் திறத்தினை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

முன்னுரை:

தமிழரின் பண்பாடு உலகம் முழுவதிலும் இன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மனித இனம் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது என்பதை பண்பாட்டுக் கூறுகளின் வாயிலாக எடுத்துக் கூறுகிறது. தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களை குறித்து நின்றாலும் அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடு ஆகும். காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, ஒருமைப்பாடு, நாகரிகம், வாழ்க்கைமுறை, போர், வீரம் போன்றவை பண்பாட்டுக் கூறுகளாக கருதப்படுகின்றன. பண்பாடு ஒரு இலக்கிய கருப்பொருளாக கூறப்படுகின்றது. பண்பாட்டினை பல நிலைகளில் வரையறை செய்கின்றனர். ஒரு நிலையில் பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூககட்டமைப்பு, அறிவுபரல்கள் என்பவற்றை குறிப்பிடுகின்றது. மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள், கருவிகள் போன்றவையும் பண்பாட்டுக்குள் அடங்கப் பெறுகின்றன. இத்தகைய பண்பாட்டு கூறுகள் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் முறையினை விளக்க இக்கட்டுரை முற்படுகிறது.

*பண்பாடும் உலக பார்வையும்:*

*ஜெர்மனியைச் சேர்ந்த அறிஞர்கள் சிறப்பாகத் தேசியவாத இயக்கங்களோடு தொடர்புடையவர்கள். பண்பாடு என்பது உலக பார்வை என்னும் எண்ணக்கருத்து ஒன்றை உருவாக்கியுள்ளனர். இவர்கள் பல்வேறு சிற்றரசுகளை சேர்த்து "செருமணி" ஒன்றை உருவாக்குவதற்காக போராடியோரும் ஆஸ்திரிய - ஹங்கேரிய பேரரசுக்கு எதிராக போராடிய தேசியவாத சிறுபான்மை இனக்குழுக்களை சார்ந்தோரும் அடங்குவர். இத்தகைய சிந்தனை போக்கு ஒவ்வொரு இனக்குழுவின் தனித்துவமான உலகப்பார்வையை வேறு படுத்துகின்றது என்னும் கருத்தை முன்வைக்கிறது. இருப்பினும் பண்பாடு குறித்த இந்த நோக்கம் நாகரீகம் அடைந்தோர் நாகரீகமற்றோர் அல்லது பழங்குடியினர் முதலிய வேறுபாடுகளுக்கு இடம் அளிப்பதாக காணப்படுகிறது.*

*இந்தியப் பண்பாடு:*

*மனித குலத்தின் மிகப் பழமையான பண்பாடு இந்திய பண்பாடு ஆகும். இந்திய பண்பாட்டை வடிவமைப்பதற்கு இந்திய சமயங்களான இந்து, பௌத்தம், சமனம் மற்றும் சீக்கிய சமயங்கள் முக்கிய பங்காற்றி உள்ளதை அறிய முடிகின்றது. ஒரு நிலையில் இந்தியா பல பண்பாடுகள் அல்லது கலாச்சாரங்களின் கலவை என்றாலும் சீன ஐரோப்பிய ஆப்பிரிக்க பூர்வீக அமெரிக்க பண்பாடுகள் போன்ற ஒரு தனித்துவமான பொது பண்பாடு இந்தியாவுக்கு உண்டு. இப்பண்பாடு பல முனைகளில் இருந்து பெறப்பட்ட தாக்கங்களை உள்வாங்கி வெளிப்பட்டு நிற்பதை காணமுடிகின்றது.*

*வட இந்தியா ஆசிய பெரு நிலப்பரப்பை ஆக்கிரமித்து இருந்ததால் அது தென்னிந்தியாவை காட்டிலும் பல்வேறு ஆளுமைகளுக்கும் அல்லது தாக்கங்களுக்கும் உட்பட்டது எனலாம். சில வரலாற்று அறிஞர்கள் தென்னிந்தியா தொடர் வாரி ஆக்கிரமிப்புகளுக்குள் உள்ளாகாததால் உண்மையான இந்தியப் பண்பாடு தென்னிந்தியாவிலேயே கூடுதலாக வெளிப்பட்டு நிற்பதாக வலியுறுத்துகின்றனர். தென்னிந்தியாவின் தென்கிழக்கு ஆசிய தொடர்புகள், இலங்கையுடனான உறவு, பிற கடல் வழி தொடர்புகள் இந்திய பண்பாட்டின் உருவாக்கத்திலும் பரவுதலிலும் முக்கிய கூறுகளாக அமைந்துள்ளன.*

*சமுதாயத்தில் காணப்படும் பண்பாடு பெரிய சமுதாயங்கள் பெரும்பாலும் துணை பண்பாடுகளை அல்லது அவர்கள் சார்ந்த பெரிய பண்பாடுகளில் இருந்து வேறுபடுத்தி காட்டுகின்றன. மக்கள் தனித்துவமான நடத்தைகளையும், நம்பிக்கைகளையும் உடைய குழுக்களை கொண்டவையாக உள்ளன. இத்துணை பண்பாடுகள் உறுப்பினரின் வயது, இனம், வகுப்பு, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன. அழகியல் சமயம் தொழில் அரசியல் போன்ற பண்புகளும் துணை பண்பாடுகளில் தனித்துவத்திற்கு காரணமாக இருக்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றும் தனித்தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை இணைந்தோ துணைப் பண்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. வரி குடியேற்ற குழுக்களையும், அவர்கள் பண்பாடுகளையும் கையாள்வதில் பல அணுகுமுறைகள் காணப்படுகின்றன.*

*அடிப்படைப் பண்பாடு:*

*இது செருமணியில் பஸ்ஸாம் திபி என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு மாதிரியாகும் இதன்படி சிறுபான்மையினர் தமக்கான அடையாளங்களை வைத்திருக்கலாம். ஆனால் அவர்கள் முழு சமுதாயத்தின் அடிப்படையான பண்பாட்டின் கருத்துக்களை ஆதரிப்பவராக இருக்க வேண்டும்.*

*கலப்பு பண்பாடு – Melting point:*

*ஐக்கிய அமெரிக்காவில் மரபு வழியாக இத்தகைய நோக்கு இருக்கிறதை அறிய முடிகின்றது. இதன்படி எல்லா வருகுடியேற்றப் பண்பாடுகளும் அரசின் தலையீடு இல்லாமலேயே கலந்து ஒன்றாகின்றன எனக் கருதப்படுகின்றது.*

ஒற்றைப் பண்பாட்டியம் – *Monoculturalism:*

சில ஐரோப்பிய நாடுகளில், பண்பாடு என்பது தேசியவாதத்துடன் நெருக்கமாக பிணைந்துள்ளதைக் காணமுடிகிறது. இதனால் வருகுடியேற்றப் பண்பாடுகளைப் பெரும்பான்மைப் பண்பாட்டுடன் தன்வயமாக்குவது அரசின் கொள்கையாக இருக்கிறது.

இத்தகைய பண்பாட்டுக் கூறுகள் சங்க இலக்கியங்களில் இடம்பெறுவதை மேலும் விரிவாக காண்போம்.

உணவு:

உலகில் முதன் முதலில் உணவை நாகரிகமாக சமைத்தவன் தமிழனே என்றும் முதன் முதலில் குழம்பு காய்ச்சப் பெற்றது தமிழகத்திலேயே என்றும் ஞா. தேவநேயப் பாவாணர் தாம் எழுதிய தமிழர் வரலாறு என்ற நூலில் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது. இஞ்சி, இலவங்கம், ஏலக்காய், மிளகு போன்றவைகளை முதன் முதலில் தமிழர்கள் தான் பயிரிட்டனர் என்பதை க.தா.திருநாவுக்கரசும் தம் தமிழ் பண்பாடு என்ற நூலில் பதிவு செய்துள்ளார். பழந்தமிழர்களின் உணவில் அரிசியே முதன்மை இடத்தை பெற்றிருந்தது. இந்த அரிசியினை ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றனர். காடைக்கன்னி அரிசி, குதிரைவாலியரிசி, சாமையரிசி, திணையரிசி, வரகரிசி. இந்த ஐந்து வகை அரிசியினை மக்கள் உணவில் சேர்த்து உள்ளதை அறிய முடிகின்றது. பல்வேறு நெல் வகைகள் இருந்துள்ளதை காண முடிகின்றது. இந்த நெல் வகைகளை குறிக்கும் வேறு பெயர்களை இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. வரி, செருசாலி, செந்நெல், சொல், இயவை, ஐவனம், அகம் என்னும் பெயர்களால் நெல்லின் வகைகள் பிரிக்கப்பட்டுள்ளன. உமிப்போக குத்துவதற்கு முன்னர் புலுங்கப்படும் அரிசியை தமிழர் புழுங்கல் அரிசி என்று குறிப்பிட்டனர். குற்றப்பட்ட உமியும் தவிடும் நீக்கப்பட்ட அரிசியை குத்தல் அரிசி என்றும் நன்கு சுத்தம் செய்யப்படாத அரிசியை கொழியல் அரிசி என்றும் கூறுகின்றனர். தமிழர் புழுங்கல் அரிசியை மிகவும் விரும்பி உண்டனர். புழுங்கல் அரிசி உடல் சூட்டை தணிக்கும் இயல்புடையது. அதனால் தமிழர்கள் உணவில் புழுங்கல் அரிசியே பெரிதும் இடம்பெற்றுள்ளது. அரிசியை பருப்பு வகைகளோடு கலந்து பொங்கல் செய்துள்ளனர். அரிசி அடையும் உலர வைத்த அரிசியை வைத்து தோசை போன்றவைகளையும் செய்து உண்டுள்ளனர். தமிழரின் உணவில் அரிசியின் பயன்பாடு அதிகம் இருந்ததால் அரிசிக்குப் பெயர்களும் அதிகமாக இருந்ததை இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது. அடிசில், அமலை, அமிழ்து, அயினி, அவி, அமிழ், அழுப்பு, உணா, உண், ஊண், கூழ், சாதி, சாதம், சொன்றி, சோ, துப்பு, தோரி, பருக்கை, பாத்து, பிசி, புகர்வு, புழுங்கல், புற்கை, பொம்மல், பொருகு, மடை, மிசை, மிதவை, முரல், வல்சி என அரிசி பல பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அடிசில், வல்சி போன்ற சொற்கள் சங்க இலக்கியங்களில் ஆளப்பட்டு உள்ளதை அறிய முடிகின்றது. சில எடுத்துக்காட்டுகள் இங்கு விவரிக்கப்படுகின்றன. அரசனுக்கு சோறு வேறு உள்ளது என்று சொல்லாத வகையில் எல்லோருக்கும் ஒரே போல உயர்ந்த உணவையும் துவையலையும் உடைய உணவை போரில் புறம் கொடுத்து ஓடாத பெருமையமைந்த தன் வீரர்களுக்கு அவர்கள் இருக்கும் இடங்களில் உணவினை அளித்துள்ளனர். “சோறு வேறு என்னனா ஊண்துவை அடிசில்” என்றது அரசனுக்கு வேறு சோறு சமைக்கப்பட்டுள்ளது என்று சொல்ல முடியாதபடி எல்லோருக்கும் ஒன்றாக சமைக்கப்பட்டுள்ள உயர்ந்த உணவாக கருதப்படுகிறது. ஊனையும் துவையலையும் உடைய உணவாகும் எனவே தான் இவை உளன் துவை அடிசில் எனப்படுகிறது. சோற்றை வேறாகப் பிரித்து அறிய இயலாத ஊனும் துவையலுமாகக் காணப்படும்.

நிலம் பெறு திணி தோள் உயர ஒச்சி
பிணம் பிறங்கு அருவத்து , துணங்கை ஆடி ,
சோறு வேறு என்னா ஊண் துவை அடிசில்
ஓடாய் பீடர் உள்வழி இறுத்து ,
முள் இடுபு அறியா ஏணி ,தெவ்வர் (பதி 45.11-15)

பகைவரைத் தோல்வியடையச் செய்து அவர்பால் பொருள்களை கள்ளை விற்றலையுடைய கடை தெருவில் கள்ளுக்குரிய சிறந்த விலையின் பொருட்டு கொடுத்ததற்கு இடமாய் இருப்பதும் வெள்வரகு பயிரையும் கொள்ளு பயிரையும் உடையதும் ஆகிய கரம்பாகிய வலிய காட்டு, நிலத்தில் சென்று தங்கி இருந்து அங்கு விளையும் வெள்வரகு சோற்றினை உண்பதன்றி செந்நெல்லாகிய உணவை அறியாதிருந்தர். புலவர்களால் புகழ்ந்து பாடுதல் அமைந்த சிறந்த

*ஊர்களை உடைய தாங்கள் தங்களுடைய நாடுகளில் நாடுகளை ஒருங்கு ஆளுதல் எங்கே உள்ளது?.*

*வெள்வரகு உழுத கொள்ளுடைக் கரம்பைச்*
*செந்நெல் வல்சி அறியார், நத்தம்*
*பாடல் சான்ற வைப்பின்*
*நாடுடன் ஆடல் யாவனது, அவுர்க்கே?. – ((பதி 75.11-14)*

*என்று உணவின் வகைகளையும் சிறப்புகளையும் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.*

*விருந்தோம்பல்:*

*சங்க இலக்கியங்கள் காதல், வீரம், கொடை மட்டுமின்றி இல்லற அறம் ஆகிய விருந்தோம்பலை சிறப்பித்து போற்றினர். விருந்தோம்பல் தமிழரின் உயிர்நாடியாகவும் பசிப்பிணி போக்க கூடியவர்களாகவும் தமிழர்கள் இருந்துள்ளனர். மன்னன் விருந்து போற்றலை அறம் என்று கருதுகின்றனர். "மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி" என்று மன்னனை போன்று மக்களும் விருந்தோம்ப கூடிய மனப்பான்மையைப் பெற்றிருந்தனர். மன்னன் விருந்தளித்த மாண்பினை சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தை பாடிய குமட்டூர் கண்ணனார் என்ற புலவர் நெடுஞ்சேரலாதனை வாழ்த்தும் முகமாக பல ஆண்டுகளாக உலகத்து உயிர்கள் எல்லாம் அறியுமாறு மேகம் மழை பொழிவதாயினும் பரிசில் மக்கள் பசியறியாதவாறு ஈவான் என்று போற்றிப் பாடுகிறார். உதியன் சேரலாதனுக்கும் வேன்மால் நளினி என்ற அரசிக்கும் மகனாகப் பிறந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். வடக்கே இமயமலை வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றவன் நெடுஞ்சேரலாதன். அதற்கு அடையாளமாக இமயத்தில் வில்லை பொறித்து வைத்துள்ளனர். தமிழகத்தின் சிறப்பினை உலகறியச் செய்து ஆரியர்களை வென்று தன்னை வணங்கச் செய்தவன். பகைவரோடு வருசனையின்றி போர் செய்து கடம்பர்களையும் வென்றவன். தன் வீரர்களுக்கு கவசமாகவும் பகைவர்கள் நடுங்கி அஞ்சி புறமுதுகிட்டு ஓடுமாறு போர் செய்யக்கூடிய ஆற்றல் படைத்தவன் நெடுஞ்சேரலாதன்.*

*போரினை வென்று பெருஞ்செல்வங்களை படைகளுக்கும் குடிமக்களுக்கும் அளித்துள்ள பாங்கு இங்கு விவரிக்கப்படுகிறது. தனது உறவினரின் நீண்ட நாள் பசியை போக்க மாமிசம் கலந்த வெண் சோற்றினை அளித்தும் பரிசிலர்க்கு தெளிந்த கள்ளினையும், புதிய ஆடைகளையும், அணிகலன்களையும் வழங்கி சிறப்பித்துள்ளதை அறிய முடிகிறது.*

*எஃகு போழ்ந்து அறுத்த வாள் நிண கொழும் குறை*
*மை ஊன் பெய்த வெண்ணெல் வெண் சோறு*
*நனை அமை கள்ளின் தேறலொடு மாந்தி*
*நீர்ப்படு பருந்தின் இரும் சிறகு அன்ன*
*நிலம் தின் சிதாஅர் களைந்த பின்றை*
*நூலா_கலிங்கம் வால் அரை கொளீஇ*
*வணர் இரும் கதுப்பின் வாங்கு அமை மென் தோள்*
*வசை இல் மகளிர் வயங்கு இழை அணிய. – (பதி 12.16-23)*

*இந்திரனிடம் அமிர்தம் பெற்றாலும் அதனை தனியாக உண்ணாமல் பகிர்ந்து உண்ணும் பண்பு பழந்தமிழ் மக்களிடம் இருந்துள்ளதை கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாடலின் மூலம் அறிய முடிகிறது. செல்வம் உடையவராய் இருக்கும்போது உணவு கொடுத்தும் இல்லாத போது இருப்பதை பகிர்ந்து உடன் உண்ணும் வரியோரோடும் அவ்வரியோடு சுற்றத்திற்கு தலைவனும் தலைமை சான்றுவனும் ஆகிய எம் வேந்தன் சிறப்புடையவன். வேந்தனின் கூறிய நுனியை உடைய வில் முதலானவைகள் பகைவரை குத்துதலால் பிடியும் நுனியும் நுனியும் சிதைந்து கொல்லனது குறுகிய பணிக்களரியில் நெற்றாரும் கிடப்பதுப் போல காட்சியளித்தன.*

*உண்டாயின் பதம் கொடுத்து,*
*இல்லாயின் உடன் உண்ணும்,*
*இல்லோர் ஒக்கல் தலைவன், - (புற 95: 6.8)*

*இசை:*

*சங்க இலக்கியங்களில் இசைக்கருவிகள், பண்கள், இசைவாணர்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுவதை காணமுடிகிறது. இசை, கலை மிகவும் தொன்மையானது. திணை வாழ்க்கைக் காலத்திலேயே ஒவ்வொரு நிலத்திற்கும் பன் வகைகளும், இசைக்கருவிகளும் தோன்றி இசையை மேலும் வலுவடைய செய்தன. பாலர்கள் பல்வகையான இசைக் கருவிகளை இசைத்து இசை கலையை வளர்த்துள்ளனர். என்னும் தொல்காப்பிய நூற்பா இசைத்தமிழின் தொன்மையை காட்டுகிறது.*

*அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்*
*உளவென மொழிய இசையொடு சிவணிய*
*நரம்பின் மறைய என்மனார் புலவர். – (தொல் .33)*

*சங்க இலக்கியங்களில் குறிப்பாக பாணர்கள் பற்றிய செய்திகள் அதிகமாகவே இடம்பெறுகின்றன. பண் இசைத்து பாடுவதாலும் பண்ணுக்கு ஏற்றப் பாடல்களை எழுதுவதாலும் அவர்கள் பாணர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் கற்பனையும் கவித்துவமும் கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.*

*யாழ் வாசித்து அரசனை புகழ்ந்து பாடுதல்:*

*யாழ் இசைத்து பாடுபவர்கள் யாழ்ப்பாணர்கள் என்று அழைக்கப்படுவர். சிறுபாணாற்றுப்படையில் யாழ் இசைத்து அரசனைப் புகழ்ந்து பாடும் செய்திகள் இடம்பெற்றுள்ளன. குரங்கு பாம்பின் தலையை பிடித்தால் அப்பாம்பு ஒருகால் இருக்கவும் ஒருகால் நெகிழவும் எப்படி எப்படி அதன் கையை சுற்றுகிறது அதுபோல யார் தண்டினிலத்தில் இறுகியும் சுற்றின நரம்பு துவக்கும் வார்க்கட்டு மணிகளை நிரலாக வைத்ததைப் போல இரண்டு விளிம்பையும் சேர வைத்து முடுக்கின ஆணிகள் பொருந்தச் செய்து வயிறு சேர்ந்த ஒழுங்காகப்பட்ட பத்தர் குமிழம் பழத்தின் நிறம் அமைந்த போர்வை, அமுதத்தை தன்னிடத்தில் பொதிந்து வைத்துள்ள முருக்கடங்கின நரம்புகள் ஆகியவைகளைக் கொண்டது சீரியாழ், இவ்வினிய இசையினைக் கொண்ட யாழை விளக்குகின்ற இசை நூல் முறையாக செம்மாலையாக இயக்கி, ஐம்பெரும் குறவர் முதியோர்க்கு குவித்த கைகளை உடையோய், வீரர் படை கருவிகள் எரிவதற்கு காட்டின மார்பினை உடையோய், ஏரினையுடைய குடிமக்களுக்கு நிழல் செய்த செங்கோலை உடைய அரசனே, என்று அரசனை யாழ் இசைத்து பாடுகின்றனர்.*

*அமிழ்து பொதிந்து இலிற்றும், அடங்கு புரி நரம்பின்;*
*பாடு துறை முற்றிய பயன் தெரி கேள்விக்*
*கூடு கொள் இன் இயம் குரல் குரல் ஆக,*
*நூல் நெறி மரபின், பண்ணி, 'ஆனாது,*
*முதுவோர்க்கு முகிழ்த்த கையினை' எனவும்,*
*'இளையோர்க்கு மலர்ந்த மார்பினை' எனவும்*
*'ஏரோர்க்கு நிழன்ற கோலினை' எனவும்*
*'தேரோர்க்கு அழன்ற வேலினை' எனவும்*
*நீ சில மொழியா அளவை . – (சிறுபாணாற்றுப்படை 226-235)*

*கொடை:*

*கொடை என்பதற்கு தியாகம், புறத்துறை, திருவிழா, வசவு, அடி என்றும் ஈகைக்கு கொடை, பொன்,. கற்பகம் என்றும் பொருள் தருகிறது சென்னை பல்கலைக்கழக தமிழ் பெயர் அகராதி. தமிழ் அகர முதலி கொடை என்ற சொல்லுக்கு ஈகம், தியாகம், கொடை, கைக்கொண்ட ஆநிரையை இரவலர்க்கு வரையாது கொடுக்கும் புறத்துறை ஊர் தேவதைக்கு மூன்று நாள் செய்யும் திருவிழா, வசவு, அடி என பெருந்துறைக்கும் பொருந்துரைக்கும் ஈகைக்கும் கொடைக்கும் உள்ள வேறுபாட்டினை அறிஞர் முத்துலக்குமி தனது நூலில் குறிப்பிடும்போது வறுமையுற்றார்க்கு அவர் வேண்டுவன ஈதல், ஈகை எனவும் தம்மை நாடிவரும் இரவலர்க்கும் பரிசிலர்க்கும் அவரைப் போற்றி வரையாது கொடுத்தல் கொடையெனவும் குறிப்பிடுகிறார். செல்வத்துப் பயனே ஈதல் என்பதை இலக்கியங்கள் காலந்தோறும் குறிப்பிடுகின்றன. செல்வத்துப் பயனே கொடுத்தலாகும். அவ்வாறின்றி யாமே அனைத்தும் நுகர்வோமென்று யாரும் இருந்து விட முடியாது என்பதை*

*உண்பது நாழி, உடுப்பவை இரண்டே,*
*பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே*
*செல்வத்துப் பயனே ஈதல்;*
*துய்ப்பேம்எனினே, தப்புந பலவே - (புறம் 189 : 6 .9)*

*உடுக்கப்படுபவை அரை ஆடை , மேலாடை என இரண்டே; இவை போல பிற உடல் உள்ள தேவைகளும் ஒன்றாகவே இருக்கின்றன. உண்பது உடுப்பது ஆகிய செயல் இரண்டிலும் அரசனும் ஆண்டியும் ஒன்றாதலால் பெற்ற செல்வத்தால் செய்ய வேண்டியதே ஈதலறம் என்று உலகோர்க்கு எடுத்துரைக்கிறது இப்பாடல்.*

*ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்*
*தாமுடைமை வைத்திழக்கும் வண்க ணவர். - (திருக்குறள் 228).*

*தாம் சேர்த்து வைத்துள்ள பொருளை பிறருக்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்து விடும் வன்கண்மை உடையவர் பிறர்க்கு கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை அறியாரோ (அறிந்ததில்லையோ). ஈந்து உவக்கும் மனிதநேய இன்பத்தையே வாழ்க்கையின் முதன்மை இன்பமாக கருதி சங்க கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.*

*முடிவுரை:*

*பண்டைத் தமிழர்கள் பண்பட்ட வாழ்வினை பண்பாடுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது. யாழிசைத்து இறைவனுக்கு தொண்டு செய்யும் பண்பாடு, இசையின் மூலமாக வெளிப்படுகிறது. தமிழ் சமுதாயத்தின் நல்ல துணையாக வரலாறு தோறும் நிற்பவை இலக்கியங்களே. அத்தகைய இலக்கியங்களின் துணைக் கொண்டு தான் சமுதாயத்தில் பண்பாடு, வாழ்வு, வளர்ச்சி, வெற்றி, கொள்கைகள் இன்னும் பல பண்பாட்டுக் கூறுகளை அறிய முடிகின்றது. சங்க இலக்கியங்களைக் கொண்டு பண்பாடு, உணவு, உடை, விளையாட்டுகள், திருமண முறை, விருந்தோம்பல், வழிபாடு, கலைகள் போன்றவைகளை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள் இடம் பெறும் விதத்தினை இக்கட்டுரை உணர்த்துகிறது என்பது இவ்வாய்வின் முடிவாகக் கருதப்படுகிறது.*

*REFERENCES:*


- *முனைவர் அ . ஆலிஸ் (2014), புறநானூறு , NCBH அம்பத்தூர் சென்னை , தமிழ்நாடு , இந்தியா.*
- *முனைவர் அ . ஆலிஸ் (2014,) பத்துப்பாட்டு , NCBH அம்பத்தூர் சென்னை , தமிழ்நாடு , இந்தியா.*
- *நாமக்கல் கவிஞர் உரை (2016) - திருக்குறள் , மணிவாசகர் நூலகம் , சிவஞானம் தெரு , தி நகர் , சென்னை , தமிழ் நாடு , இந்தியா.*
- *முனைவர் அ . ஆலிஸ் (2014) ,பதிற்றுப்பத்து , NCBH அம்பத்தூர் சென்னை , தமிழ்நாடு , இந்தியா.*
- *தொ . பரமசிவன் (2022) பண்பாட்டின் வாழ்வியல் NCBH அம்பத்தூர் , சென்னை , தமிழ்நாடு , இந்தியா .*
- *சு . வித்தியானந்தன் ,(2013) தமிழர் சால்பு குமரன் புத்தக இல்லம் , வடபழனி , தமிழ்நாடு , இந்தியா .*


********* ********* ********** ********* ********* ********** ********** **********